# கட்டண விபரம்

பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளின் வியாபார உரிமக் கட்டணங்கள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன வியாபாரத்தின் ஆண்டு மதிப்பு உரிம கட்டணம்

பிரதேசசபை நகரசபை

| வியாபாரத்தின் ஆண்டு மதிப்பு | உரிம கட்டணம் ரூபா |
| --- | --- |
| ரூ.750.00க்கு மேற்படாதவிடத்து | ரூ. 500.00 |
| ரூ.750.00க்கு மேற்பட்டு ரூ.1500.00க்கு மேற்படாதவிடத்து | ரூ. 750.00 |
| ரூ.1500.00க்கு மேற்படுமிடத்து | ரூ.1,000.00 |

மாநகர சபை

| வியாபாரத்தின் ஆண்டு மதிப்பு | உரிம கட்டணம் ரூபா |
| --- | --- |
| ரூ.1500.00க்கு மேற்படாதவிடத்து | ரூ. 2000.00 |
| ரூ.1500.00க்கு மேற்பட்டு ரூ.2500.00க்கு மேற்படாதவிடத்து | ரூ. 3000.00 |
| ரூ.2500.00க்கு மேற்படுமிடத்து | ரூ. 5000.00 |

# வியாபார அனுமதிப்பத்திரம்



Funded by European Union

UNDP

STRIDE CDLG Capacity Development of Local Governments

## 01. நீங்கள் ஏன் வியாபார அனுதிபத்திரங்கள் உள்ளுராட்சி மன்றத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்?

வியாபார உரிமம் என்பது உங்கள் வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் மற்றும் உள்ளுராட்சிமன்றத்தின் பிரதேசத்திற்குட்பட்ட மக்களுக்கு உங்கள் வியாபாரமானது முழுமையான சான்றிதழ் செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டு, தீ ஆபத்துகள், சுகாதார அபாயங்கள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பா–னதாக அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் நகரத்தின் அனைத்து விதிமுறைகளுக்கு இணங்குவதா–கவும் உறுதியளிக்கும் ஒரு வடிவமாகும்.

## 02.எவ்வகையான வியாபாரங்கள் வியாபார அனுமதிபத்திரம் பெறப்படுதல் வேண்டும்?

வியாபார உரிமங்களைப் பொருத்தவரை விண்ணப்பதாரர் உள்ளுராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அபாயகரமான வியாபாரங்கள் ஊறுவிளைவிக்கும் வர்த்தகங்கள் அல்லது அபாயகரமானதும ஊறுவிளைவிக்கக்கூடியதுமான வியாபாரங்களை நடத்துவதற்கு உரிமம் பெற்றிருக்க வேண்டும். உரிமம் அல்லது வரி செலுத்த வேண்டிய வியாபாரங்களை உள்ளுராட்சி மன்றம் வரையறை செய்யும்

## 03.நீங்கள் வியாபார உரிமம் பெறாவிட்டால் உள்ளுராட்சிமன்றம் என்ன செயல்முறையை பின்பற்றும்

| செயல்முறை | கால கட்டம் | அதிகாரம் |
|---|---|---|
| வியாபார உரிமம் பெறுவதற்கும், உரிமம் பெற்றுக்கொள்ளாது வியாபாரத்தை நடத்தும் நபருக்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிப்பதற்கும் வியாபார உரிமையாளருக்கு அறிவுறுத்தல் வழங்குதல் | | |
| அறிவிப்புக்கு இணங்கத் தவறினால் நீதவான் நீதிமன்றங்களில் வழக்கு தொடருதல் | அறிவிப்பு வெளியிடப்பட்ட 7 நாட்களுக்குள் | |
| உரிமம் இல்லாமல் தொழிற்பட்டதற்கு ஒவ்வொரு நாளும் ரூ.750 மற்றும் ரூ.250 அபராதம் விதிக்கப்படும். | | நீதவான் நீதிமன்றம் |

மேலதிக விபரங்களுக்கு

## 04. வியாபார உரிமத்திற்கு எப்போது விண்ணப்பிக்க வேண்டும்?

புதிதாக அமைக்கப்படும் வியாபாரம் என்றால், நீங்கள் வியாபார அனுமதிப–த்திரத்திற்கு விண்ணப்பித்து, செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு முன் அதைப் பெற வேண்டும். நீங்கள் ஏற்கனவே வியாபாரஅனுமதிபத்திரம் வைத்திருப்பவராக இருந்தும், புதிய உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டியிருந்தால் நீங்கள் ஏற்கனவே உள்ள உரிமம் காலாவதியாகும் முன்பே புதிய உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.நீங்கள் ஏற்கனவே வியாபார உரிமையாளராக இருந்தால், உள்ளுராட்சிமன்றம் உங்கள் உரிமத்தை முந்தைய ஆண்டின் செப்டம்பரில் புதுப்பிக்கும் செயல்முறையைத் தொடங்கும், அதாவது 2023 ஆம் ஆண்டிற்கான உங்கள் உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு, செப்டம்பர் 2022 இல் செயல்முறை தொடங்கப்படும்.